உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"பச்சைமால் அனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சில், நாற் றிசையும் உண் ணும்; அமிர்தென, எழுநா எச்சில்
மெச்சிநா ளும் விண்ணோர் மிசைகுவர்; வேத போதன்
'நச்சினார்க் கினியன்' எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்"

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—தமிழ் மறை

தொகுதி 2. } அக்ஷய-௵ புட்டாசி௴ 1926-௵ ஸெப்டம்பர்௴ { பகுதி 9.

ஆண்மைக் கட்டுரை.

நாமார்க்கும் குடி அல்லோம் ; நமனை அஞ்சோம் ;
நரகத்தில் இடர்ப்படோம் ; நடலை இல்லோம் ;
ஏமாப்போம் ; பிணிஅறியோம் ; பணிவோம் அல்லோம் ;
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை.
தாமார்க்கும் குடிஅல்லாத் தன்மை ஆன
சங்கரன்நல் சங்கவெண் குழைஓர் காதின்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே.
என்றும்நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம் ;
இருநிலத்தில் எமக்கெதிர்ஆ வாரு மில்லை ;
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம் ;
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்.
ஒன்றினால் குறைவுடையோம் அல்லோம் ; அன்றே
உறுபிணியார் செறல்ஒழிந்திட் டோடிப் போனார் ;
பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே.

—ஆளுடை அடிகள்.

மருவி வழங்கும் சில சொற்கள்.

(227-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

‘தைலம்’ என்பது ‘திலம்’ எனக் குறைய நியாயமிருப்பின், ‘தில்லைஸ்தானம்’ என்ற க்ஷேத்திரம், ‘திலஸ்தான’ மாயிருத்தல் வேண்டுமென்பது எமது கருத்து. ஏனெனில் ‘தில்லைஸ்தானம்’ என்பது ‘தில்லைக்காடு நிறைந்த இடம் இல்லையாதலாலும், ‘திரு நேய்த் தானம்’ என்று தென்மொழியும் வடமொழிச் சிதைவும் கலந்து தமிழரால் வழங்கப்படுதலாலும் என அறிக. [எமக்கு வடமொழிப் பயிற்சி மிக்கில்லையாதலின் அம்மொழி வல்லுநரேனும் பிறரேனும் தக்க ஆதாரங்காட்டி இதன் உண்மையை விளக்குமாறு வேண்டுகிறோம்.]

‘மம்பட்டி’என்பது, ‘மண்வெட்டி’ என்பதன் மரூஉ. ‘மண்ணை வெட்டியெடுக்க உபயோகமாகும் ஆயுதம் என்பது அதன் பொருள்

சிலர்க்கு ‘முழி’, ‘விழி’ ‘முளி’ ‘மோழி’ என்பவற்றின் பொருள் வேறுபாடு தெரிவதில்லை. ‘‘முழிக்கிற முழியைப் பார்’’ என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். இவ்வாக்கியத்தில் ‘முழி’ என்பன ‘விழி’ என்றிருத்தல் வேண்டும். ‘விழி’ என்பதே ‘பார்வை’யையும் ‘பார்த்தலை’யும் உணர்த்தும் சொல். ‘முழி’ என்பது கை, கால் முதலியவற்றிலுள்ள ‘கணு’வை உணர்த்தும் சொல். ‘கீழே விழுந்ததால் அவன் முழி பிசகிவிட்டது’ என்ற உதாரணத்தைக்கொண்டு அதன் பொருளை ஞாபகப்படுத்திக் கொள்க. எக்காரணத்தாலோ, இந்த ‘முழி’ என்ற பதம் அகராதியில் காணப்படாத அருஞ்சொல்லாயுளது. சிலர் ‘முழி’ என்பதை ‘மொளி’ என்றும் ‘முளி’ என்றும் தவறாகக்கூறுவர். ‘மொளிலே போட்டான்’ என்றும், ‘முளிலே அடிபட்டது’ என்றும் சிலர் கூறுவதே இதற்கு உதாரணமாம். ‘மோளி’ என்ற வார்த்தையே தமிழில் அல்லது பிற பாஷைகளில் இல்லை. ‘முளி’ என்பது ‘வற்றல்’ ‘காய்ந்து வற்று’ என்ற பொருளில் உபயோகப்படும் ஓர் அருஞ்சொல். ‘நெல்லுக்கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி புல்லுக்கிறைப்பாரோ போய்?’’ என்பதில் ‘முளிபுல்’ என்பது, ‘உலர்ந்து வற்றிய புல்’ எனப் பொருள்படுதல் கொண்டு இவ்வுண்மையை உணர்க. ‘முளி’ என்பது ‘வற்றல்’ பொருளில் வந்தமைக்கு நாமே அறிந்ததும், பிழைபட வழங்கி வருவதுமான ஒரு சொற்

றெடையையும் உதாரணமாகக் குறிப்பாம். துவாதசிப்பாரணைக்கு இன்றியமையாப் பொருள்களில் ஒன்றென மதிக்கப்படுவது 'நெல்லி வற்றல்'. இதனை 'நெல்லி முள்ளி' என்கிறார்கள். இதனால் துவையல் அல்லது பச்சடி செய்வர். 'முளி' என்பது வற்றலை உணர்த்தும் சொல்லும், 'முள்ளி' என்பது முள் வாய்ந்த ஓர் பொருளை உணர்த்தும் சொல்லும் ஆதலின், 'நெல்லி முள்ளி' என்பது 'நெல்லி முளி' என்றிருத்தல் வேண்டும். "மொழி" என்பது 'வார்த்தை', 'பேசு', 'பாஷை' முதலியவற்றைக் குறிக்கும் சொல்.

(இன்னும் வரும்)

பத்திராதிபர்.

பிரமசரியம்.

(175-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிராணயாமத்தில் நான்கு வகைகள் உண்டு: அவை ஏகபாதப் பிராணயாமம், துவிபாதப் பிராணயாமம், திரிபாதப் பிராணயாமம், சதுஷ்பாதப் பிராணயாமம் எனப் பெயர் பெறும். இவை யாவற்றினும் சேவனை, தாரணை, விஸர்ஜனம் மூன்றும் இருத்தல்வேண்டும். அவைகளுக்குரிய கால அளவை வருமாறு:—

1. ஏகபாதப் பிராணயாமம்.—இதற்கு ஆறு மாத்திரை நேரம் வாயுவை இழுத்து, ஆறு மத்திரை காலம்வரை அதனை உள்ளேயே இருத்தி வைத்திருந்து, பின் எட்டு மாத்திரை காலத்தில் அதனை மெள்ள வெளியே விடுதல் வேண்டும்.

2. துவிபாதப் பிராணயாமம்—இதற்கு ஆறுமாத்திரை நேரம் வாயுவை இழுத்து, பன்னிரண்டு மாத்திரைகள் வரை தரித்திருந்து, ஒன்பது மாத்திரையளவில் வெளியே விடுதல்வேண்டும்.

3. திரிபாதப்பிராணயாமம்.—இதற்கு ஆறுமாத்திரைநேரம் வாயுவை உட்கொண்டு பதினெட்டு மாத்திரைவரை தரித்திருந்து பத்து மாத்திரையளவில் வெளியே விடுதல்வேண்டும்.

4. சதுஷ்பாதப் பிராணயாமம். இதற்கும் ஆறுமாத்திரை அளவில் வாயுவை உட்கொண்டு, இருபத்துநான்கு மாத்திரைகாலம் உள்ளேயிருக்கும்படி செய்து பன்னிரண்டு மாத்திரை அளவில் வெளியே விடுதல்வேண்டும். இவைகளுள் சதுஷ்பாதப் பிராணயாமமே பூர்ணமான பிராணயாமமாகும்.

ஆரம்பதினத்தில், ஏக பாதத்தில் 4ம், துவிபாதத்தில் 3ம், திரிபாதத்தில் 2ம், சதுஷ்பாதத்தில் 1மாக, முறையாகச் செய்தல்வேண்டும். பிரதி பதினைந்து தினங்களுக்கும், ஒவ்வொரு பாதத்திலும் ஒவ்வொன்றாக உயர்த்திக்கொண்டே செல்லல் வேண்டும். அதாவது 16ஆவது நாளில் ஏகபாதத்தில் ஐந்தும், துவிபாதத்தில் நான்கும், திரிபாதத்தில் மூன்றும், சதுஷ்பாதத்தில் இரண்டும் செய்தல்வேண்டும். 31ஆவது நாளில் ஏகபாதத்தில் ஆறும், துவிபாதத்தில் ஐந்தும், திரிபாதத்தில் நான்கும், சதுஷ்பாதத்தில் மூன்றும் செய்தல்வேண்டும். இங்ஙனம், முறையே 15 தினங்களுக்கு, ஒவ்வொன், றிலும் ஒவ்வொன்றாக உயர்த்திக்கொண்டு செல்லுங்கால், ஏகபாதம் 25 ஆவதிற்கு வந்தவுடன் அதைவிட்டு மீதியைச்செய்து கொண்டு போதல்வேண்டும். துவிபாதம் 40 ஆனவுடன் அதைவிட்டு விடல் வேண்டும். திரிபாதம் 60க்கு வந்தபிறகு அதையும் விட்டுவிட்டுச் சதுஷ்பாதத்தைமட்டும் செய்துகொண்டு போதல்வேண்டும். அதுவரை 15 தினங்களுக்கு ஒவ்வொன்றாக அதிகரித்துக்கொண்டே செல்லுதல்வேண்டுமென்பதை மறக்கொணாது.

பிராணாயாமத்தை முதலிற் பகலிற் செய்தலினால் கெடுதியுண்டாகும். ஆதலின் தொடக்கத்தில் இராக் காலத்திலேயே ஆரம்பஞ் செய்க.

இந்தப் பழக்கமானது சாரீரகம், மானசிகம், நைத்திகம், இவற்றின் அபிவிர்த்திக்கு அத்தியாவசியமானது. என்ற நம்பிக்கை இருத்தல்வேண்டும். எவ்விதமான கெடுதலும் இதில் இல்லை.

முன் நான்கு பாதமுள்ள பிராணாயாமத்தில் ஆறுமாத்திரையளவு வாயுவை இழுத்தல், இருபத்துநான்கு மாத்திரையளவு தரித்திருத்தல், பன்னிரண்டு மாத்திரையளவில் வெளியே விடுதல் என்று கூறியிருப்பதில், மாத்திரைகளை உச்சரிப்பதற்குப் பதிலாக, ஆறு மாத்திரைகளுக்கு ஒரு முறையும் இருபத்துநான்கு மாத்திரைகளுக்கு நான்கு முறையும், பன்னிரண்டு மாத்திரைகளுக்கு இரண்டு முறையுமாகக் காயித்திரி மகாமந்திரத்தைப்பொருள் அறிந்து ஜபிக்க. (பொருள் தெரியாது ஜபத்தலிற் பயனில்லை.)

இதனால் ஏக காலத்தில் மாத்திரைகளை எண்ணவும். கடவுள் பால் எண்ணம் செலுத்தவும், கூடிய சக்தி விரைவில் வந்தெய்தும் இவ்விதச் சாதனங்களைக் கைக்கொண்டு வீரிய ரக்ஷணை செய்தலே பிரமசரியமாம்.

முற்காலத்தில் மக்கள் சராசரி நூறுவயதிருந்தனர். தற்காலத்தில் இந்திய மக்களின் வயது சராசரி இருபத்துநான்கு என்கிறார் ஸர்.எம். விஸ்வேஸ்வரய்யர். முன்னோர் மிக்க பலாட்டியராயிருந்தனர். தற்போது நம்மவர் பலம் யாங்ஙனம் உளது? வான்மீகி, மனு, வேதவியாசர், காளிதாசர், சங்கரர், வள்ளுவர், கம்பர், முதலியோர்களின் அதியற்புத புத்திகூர்மையின் தன்மையென்ன? நம் நிலையென்ன? பீஷ்மர், அரிச்சந்திரன, வள்ளுவர் முதலானவர்களுடைய ஒழுக்கம் எங்ஙனம் உயர்ந்திருந்தது! தற்போதுள்ள நம்மவர்களின் ஒழுக்கம் இங்ஙனம் கெட்டிருப்பானேன்? நிறைந்த ஆயுள், சரீர பலம், புத்தி கூர்மை, ஒழுக்கம், முதலிய யாவற்றினும் சிறந்த பெரியோர்களின் சந்ததியில் வந்த நம்மவர், இங்ஙனம் யாவற்றினும் ஒருங்கே இழந்த நிலை அடைந்திருப்பதற்குக் காரணம், பிரமசரிய விரதத்தை உபேக்ஷித்தமையேயாம். ஆகவே இனிமேனும் நம்மவர் பூர்ண ஆயுள், வன்மை, வஜ்ர சரீரம், கூரிய புத்தி, சீரிய ஒழுக்கம் முதலிய சிறந்தபேறுகளை அடையவிரும்பின், மேற் கூறியுள்ள நெறியில் நின்று பிரமசரிய விரதத்தைச் சரிவர அனுஷ்டித்து சகல நன்மைகளையும் எய்தப் பெறுவார்களாக.

பிரம சரியமே பிராண னாகும்
விரிய நாசமே மிருத்தியு வாகும்
நன்னர் இதனை யுன்னி,
நலம் பெறு நெறியிற் பலம்பெறு வீரே"

தமிழ்ப்பண்டிதர்: சே. ரா. கணபதி சுப்ரமண்ய ஐயர்,

ஆடிமீ விடுகதை வினவுக்கு விடை.

அகத்தியனே அன்னை. ஆர்.ஸ்ரீநி வாசன்
மகத்துவமார் ஆனே மலையான்—அகத்தார்
விருப்பதிக மிக்கு விடுத்த கவிக்குத்
"திருப்பதி"யே சேர்விடையாம் செப்பு.

T கேசவராமன்,
திருச்சி நாஷனல் காலேஜ் I. வகுப்பு, மாணவன்,

பெஞ்சமின் பிராங்க்லின்.
Benjamin Franklin.

அத்தியாயம் 12.

படிப்பினைகள்.

சான்றோர்கள் வாழ்க்கைச் சரிதமெலாம் நாமுமவர்
போன்(று) உயர்வாழ் வெய்திப் போங்காலை,—தோன்ற நன்கு
'காலம்' எனும் மணலிற் காலடிநாம் வைத்தேகற்
கேதும் எனத்தெரிக்கு மே.
இப்புவிவாழ் வென்னும் இருங்கடலிற் செல்லுகையில்
கப்ப லுடைந்ததனுற் கையற்றுத்—திப்பிரமை
தோற்றி அலையுமனச் சோதரற்குத் தேற்றரவின்
காற்றிடுமால் அக்கால் அடி—அரும்பொருட்டிாட்டு.

பிலடல்பியாவில் அவரை வரவேற்கக்கூடிய கூட்டம் தேர்க் கூட்டம் திருநாள் கூட்டமே. அவ்வளவு பேரும் அவரை அவர் வீட்டு வரை தொடர்ந்து வந்து தங்கள் மெய்யன்பைக் காட்டினர்.

அகில மாகாணாதிபதியாகிய வாஷிங்க்டனே அவர் செய்த நலம் யாவையும் பாராட்டி ஒரு கடிதம் அனுப்பினர். அகில ஐக்கிய மாகாண ஜனசமூக சபையும் ஓர் உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்தது. கடைசியில் அவர் பென்ஸில்வேனியாவிற்கு கவர்ன ராகும் பாக்கியத்தையும் பெற்றார். இப்பொழுதுதான் அவர் தம் முடைய ஜீவிய சரித்திரத்தைத் தாமே எழுதத் தொடங்கினர். 84-ஆவது வயதில் அவர் ஆயாசமின்றித் தேகவியோகமாயினர்.

பெஞ்சமினுடைய சரித்திரத்தைப் படித்தவர்கள் யாவரும் அவரைப்போலவே சீரும் சிறப்புமாக வாழ முயல்வார்களாக. பெரியோர்களுடைய வாழ்க்கைச் சரிதங்களெல்லாம், நாமும் அவர் போன்று நம் வாழ்நாட்களில் நேரிடக்கூடிய பல்வகை இடையூறு களையும் விலக்கி மேற்சென்று எல்லோராலும் மதிக்கப்படும் வண்ணம் நம் ஆயுட்காலத்தை கழிக்கும் வகையைக் கற்பிக்கும்.

முதல்முதலில் அச்சுக்கூடத்தில் அச்சுக்கோக்கும் தொழிலில் அமர்ந்த பரம ஏழையான பெஞ்சமின், உலகம் போற்றற்குரிய சீரும், செல்வமும், சிறப்பும், செல்வாக்கும் படைத்ததற்குக் காரணம் என்ன? அவரது வாய்மையும், நேர்மையும் உலையாமுயற்சியு

மன்றோ? நல்வழியிற்றேடிய பொருளைத் துர்விநியோகம் செய்யாமல் செட்டாய்ச் செலவழித்ததாலன்றோ, செல்வம் அவருக்குப் பெருமையையும், பிறருக்கு நன்மையையும் விளைவித்தது. பெஞ்சமினைப் போலப் பல்வேறு பாஷைகளைக் கற்றும், கற்றவழி நின்றும், பெருமை அடைந்தால் அது நாட்டுக்கு எவ்வளவு பெருமை! பல கற்றும் வித்தியா கர்வம் அவருக்கு இல்லாதிருந்தது எவ்வளவு வியக்கத்தக்கது!

நாம் இவ்வுலகத்தில் தோன்றியது கேவலம் நம் பொருட்டே யன்றிப் பிறர்பொருட்டுந்தான் என்பதையும் உணர்த்தப் பிராங்க்லின் சரித்திரம் போதியதன்றோ? எவ்வளவு உயர் பதவி உற்றும், தன்னலம் வெறுத்துத் தாய் நாட்டிற்காக இயன்றவாறு பாடுபடல் வேண்டும் என்பதற்கும், லாபம், நஷ்டம், மதிப்பு, அவமதிப்பு முதலியன கருதாது கடமையைச் செலுத்தி வரவேண்டுமென்பதற்கும், பெஞ்சமினே ஒரு பொருட் பாடமாவர்.

பேரும் பிரசித்தியும்பெற்ற அமெரிக்க ராஜதந்திர நிபுணரும் தத்துவ சாஸ்திரியுமான இப் பெரியாரது இளமைப் பருவத்தில் நிகழ்ந்த ஒரு விநோத சம்பவத்தைக்கூறி அவரது இச் சரித்திரத்தை முடிப்பாம்.

மாரிகாலத்தில், ஒரு நாள், கோடரியும் கையுமாய் விறகுவெட்டி ஒருவன் வந்து, வீட்டினுள் இருந்த அவரைப் புன்சிரிப்புள்ள முகத்துடன் அழைத்தான். அவர் வெளி வந்ததும்,

விறகு வெட்டி:—"அழகிய சிறுவ! உன் தந்தையாரிடம் சாணைக்கல் ஒன்றுளதல்லவா!"

பேஞ்சமின்:—ஆம், ஐய!

வி. வே. :—நல்ல பயல் அல்லவா நீ? அதில் என் கோடரியைக் கொஞ்சம் தீட்டிக்கொள்ளலாமா?

பேஞ்:—('நல்ல பயல்' என்றவுடன் உச்சி குளிர்ந்தவராய்) நல்லது, அது கடையில்தான் உள்ளது. வாருங்கள்.

வி. வே. :—(அவரைத் தட்டிக்கொடுத்து) சாணைக்கல்லை நனைத்திடச் சிறிது தண்ணீர் கொண்டுவா பார்ப்போம்.

பேஞ்:—(மகிழ்வுடன் சென்று ஒரு கரகம் நிறைய நீர் கொணர்ந்து) ஐய! இதோ தண்ணீர்.

வி. வே. :—உன் வயதென்ன? உன் பெயர் யாது?—நானும் எத்தனையோ பயல்களைப் பார்த்திருக்கிறேன். உன்னைப்போல நல்ல

வனைப் பார்த்ததே இல்லை.—சிறிது நேரம் இந்தச் சாணைக்கயிற்றை இழுக்கிருயா?

பெஞ்சமின் இச்சகமொழியால் இன்புற்றுக், காகாவென்று, கஷ்டப்பட்டு, அக்கயிறு பிடித்து இழுக்கலானுர். அரை மணி ஆயிற்று. விறகு வெட்டி 'போதும்' என்றுனில்லை. ஒரு மணி ஆயிற்று—அவன் அப்பொழுதும் அவரை நிறுத்தச் சொல்லவில்லை. அவர் இளைத்துக் களைத்துச் சுருண்டு விழுந்தே விடுவர் போலிருந்தது. இதற்கிடையில், பள்ளிக்கூடத்தில் மணியடித்துவிட்டார்கள். பெஞ்சமின் மனம் திடுக்கிட்டது. ஆயினும் தாக்ஷிண்யத்தால் அவர் தாம் தொடங்கிய வேலையை நிறுத்திலர். மணிக்கணக்காய்க் கயிறு இழுத்துப் பாவம்! அவர் கைகள் கொப்பளித்தே போய்விட்டன. அப்பொழுதும், கோடரி, அரைவாசிதான் கூராகியது. வெகு நாழிகைக்கப்புறமே கோடரி முற்றும் கூராகியது.

அது தீட்டி முடிந்தததுதான் தாமதம். விறகுவெட்டி பெஞ்சமினை நோக்கி, "கள்வாணிப் பயலே! பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் களவடித்துக் காலங்கழிக்க எண்ணியா இதுவரை இருந்தாய்? தெரியுமே உன் செய்தி. எடு ஓட்டம் பள்ளிக்கூடத்திற்கு. இல்லையேல் உனக்குப் பிடித்தது கேடு." என்று நிர்த்தாக்ஷிண்யமாய் இரைந்து திட்டி அதட்டி ஓட்டினுன். இரு கையும் கொப்பளிக்க அம் மாரிகாலத்தில் அவர் தாக்ஷிண்யம் தட்டாது செய்த உதவிக்கு அவருக்குக் கிடைத்த கைம்மாறு பார்த்தீர்களா? உபகாரம் செய்து கள்வாணிப் பட்டம் வாங்கிய அவர் மனநிலையை எடுத்துரைக்க நாமோ வல்லோம்? இச்சம்பவத்தை அவர் உயிர் பிரியும் வரை மறந்திலர். எவனுவது எவரையேனும் அளவுக்கு மிஞ்சி உபசாரம் செய்வதைக் கண்டால், "ஓ கோ! சரிதான்: இவனிடம் தீட்டிக் கொள்ள ஒரு கோடாலி இருக்கிறுப் போலிருக்கிறது. அதற்காகத்தான் இந்த ஜாலமெல்லாம்" என்பர். காரியம் ஆதற்குக் கழுதைக் காலைப்பிடிக்கும் வேஷக்காரர்களுக்குக் 'கோடாலி தீட்டவந்தவன்' என்ற சங்கேதப் பெயர் இவர் இட்டதேயாம். ஆதலின், ஆஷாடாபூதிகளின் மாயத்திற்குள்ளாகாமல் இருக்கவேண்டுமென்பதும் இவருடைய சரித்திரத்தால் நாம் நன்கு அறியக்கூடிய மற்றெரு படிப்பினையாகும். முற்றிற்று.

P. சுந்தரராஜையங்கார் B. A.,
சரித்திராசிரியர், விருதுநகர் க்ஷத்திரிய வித்தியாசாலை,

விடுகதை வினு.

ஐந்தெழுத்தால் ஆகுமொரு ஊரின்பேர்தான்
'அநர்த்தம்' எனும் பொருளியும் அதிலேயுள்ள
முந்திரண்டும் மறைந்தொழியின். அடுத்துக் காணும்
மூன்றுடு நான்(கு) இல்லையெனில் 'பாவம்' ஆகும்.
வந்தஇரண் டொடுமூன்றும் நீங்கில் 'பற்(று)' ஆம்.
மற்றுமுள நாலிரண்டும் ஐந்தும் சேரில்,
தொந்தமின்றி 'உயிர்சென்ற உடலின்தன்மை'
தொல்புகழ்சேர் அவ்வூர்தான் யாதுசொல்லே.

T. கேசவராமன்.

விநோதக்கூற்று.

ஒரு தோட்டத்தில் மூவர் இசைந்து பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் சச்சரவு, ஒவ்வொருவரும் இத்தனை இத்தனை மரக்கால் ஜலம் இறைக்கக்கூடும் என்பதைப்பற்றியது. ஒருவன் தன்னுல் 100 மரக்கால் இறைக்கக்கூடும் என்றுன். மற்றொருவன் தான் 110 மரக்கால் இறைக்கக்கூடும் என்றுன். மூன்றுவன் தன்னுல் 125 மரக்கால் இறைக்கக்கூடும் என்றுன். இவையில்வந்த வேறு ஒருவன் சும்மாயிராமல், இத்தனைபேர்களும் இறைத்ததுக்குமேல் 7 மரக்கால் நான் இறைப்பேன் என்றுன். மூவரும் "ஒருக்காலும் முடியாது" என்று கூறினர். நான்காவனே தான் சொல்லியபடியே செய்து காட்டுவதாகவும், பந்தயம்கட்டிப் பரிசைக்ஷ பார்க்கலாம் என்றும் சொன்னுன். மூவரும் சம்மதித்து முறையே 100-110-125 மரக்கால்களை முக்கித்தக்கி இறைத்து முடித்தனர். பின்னர், நான்காவன் அலட்சியமாய் எழுந்து 7 மரக்கால் நீர் இறைத்து, மீசையை முறுக்கிப் "பந்தயப் பொருள் எங்கே!" என்றுன்.

மூவரும்.—என்ன அர்த்தம்?

நான்காவன்.—அர்த்தமா! சொன்ன சொல்லை நிறைவேற்றினேன். சொன்ன பந்தயம் கேட்கிறேன்!.

மூவரும்.—நாங்கள் மூவரும் இறைத்ததுக்குமேல் ஏழு மரக்கால் இறைக்க நீ ஒப்புக்கொள்ளவில்லையா?

நான்காவன்.—ஆம் நீங்கள் இறைத்தீர்கள். அதற்குமேல் தானே நான்ஒப்புக்கொண்டபடி ஏழு மரக்கால்களையும் இறைத்தது!

கோ. பெருந்திரு.

மாண்டவன் மீண்ட மாயம்

ஐந்தாவது அத்தியாயம்.

இனிச் செய்யவேண்டியது.
The Further Plan.

கைலாஸம் சொன்ன வார்த்தையைக்கேட்டதும் ராமஸ்வாமி திடுக்கிட்டு, சிறிது அவநம்பிக்கைகொண்டு, 'ஒருவேளை பரிகாஸந் தான் செய்கிறானோ' என்று சற்றுக் கடிந்து, "கைலாஸம்! என் பிழைப்பைப் பார்த்தால் உனக்கும் பரிகாஸமாய்த் தோன்றுகிறது போலும்" என்றான்.

கைலா:—"நான் பரிகாசம் செய்வேனா? இதோ இந்தப் புஸ்தகத்தைப் பார். நீ சொன்ன கதை முழுமையும் விபரமாய் இருக்கிறது. பெயர்களும் இடமும் மாத்திரம் வேறே—"

ராமஸ்வாமி அந்தப் புஸ்தகத்தை மேலிருந்தவாறாக அங்கும் இங்கும் புரட்டி இரண்டொருவரிகள் வாசித்துவிட்டுக் கைலாசம் சொல்லுவது உண்மைதான் என்று உணர்ந்தான். தான் முந்திய இரவில் கேட்ட சொந்த சமாசாரமும் இப்பொழுது நாவலாய் விளங்கும் பொய்க்கதையும் ஒத்திருப்பதைப் பார்க்க ஆச்சரியமும், துக்கமும் அடைந்து, "கைலாஸம்! இதிலிருந்து உனக்கு என்ன தோன்றுகிறது?" என்றான்.

கைலா:—"ஒன்றும் தோன்றவில்லை. யோசனையாய் இருக்கிறது. சரி! இருக்கட்டும். உன் தகப்பனார் இறந்தார் என்பதை நீ நம்புகிறாயா?"

ராம:—"அதில் சந்தேகமா? சிதம்பரம் பொய்சொல்லக்கூடியவனல்லவா. மேலும், இந்தக் கட்டைப் படித்தால் 1885-ஆம் வருஷ நடவடிக்கைகள் நன்றாய்த் தெரிகின்றன. 1885-ஆம் வருஷம் என் தகப்பனார் கொலையுண்டது வாஸ்தவம். என் எண்ணம் இந்தத் தாமராஜுதான்—"

கைலா:—"சரி!—ஆனால் இதன்மேல் வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டியது தானே?"

ராம:—"கட்டாயம்! கட்டாயம்!"

கைலா:—(சற்று யோசித்து,) "போலிஸ் போகட்டுமே—"

ராம:—என்ன அப்படிச் சொல்லுகிறாய்! இவனை எப்படியாவது கண்டுபிடித்துப் பழிக்குப்பழி வாங்கினலொழிய என் மனம் சமாதானமாகாது—"

கைலா:—"உன் வேலே?"

ராம:—"இன்னும் 2-மாதம் 'ரஜா' எடுத்துக்கொள்ளுகிறேன். வேலே போனாலும் போகட்டும். இதை விடுகிறதில்லே. இருப்பதை வைத்து அரை வயிறுவது வளர்ப்பேன்."

கைலா:—"இருபது வருஷங்களாயினவே! கொலே செய்தவன் உயிரோடுதான் இருக்கிறானோ? அல்லது, எங்கே போனானோ? இவ்வளவு காலத்திற்குப் பிறகு கண்டுபிடிக்கக்கூடிய மார்க்கங்களும் அடையாளங்களும் தெரியமாட்டா. மேலும், கண்டுபிடித்துத்தான் என்ன ஆகவேண்டும்!"

ராம:—"நீ என்ன சொன்னாலும் நான் விடப்போகிறதில்லே. நான் இதைக் கண்டுபிடித்தாலொழிய—, என் தலேவிதி எப்படியானாலும் சரி—"

கைலா:—"சரி. வேண்டிய முயற்சி செய்வோம். யார் கண்டார்? ஒருவேளே கொலேயாளி நம்முடைய கையில் அகப்பட வேண்டி ஏற்பட்டிருக்குமோ, என்னவோ?"

ராம:—"உயிருடன் இருந்தால்—"

கைலா:—"அதுதான் பொதுவான வார்த்தையாயிற்றே."

இந்த ரகஸ்யத்தைக் கண்டுபிடித்தே தீரவேண்டுமென்று கடசியாய் இருவரும் தீர்மானம் செய்துகொண்டார்கள். பிறகு,

கைலா:—"சரி! முதல் விஷயம் இரண்டு கதைகளேயும் வாசிக்கவேண்டும்."

ராம:—"இரண்டு கதைகள்?"

கைலா:—"ஆம் உன் கையில் இருக்கும் கேஸ்கட்டுகளினால் தெரியும் விருத்தாந்தமே, நான் வாசித்த சம்பந்தத்தின் நாவலும். இன்று நீ நாவலே வாசி. நான் கட்டை வாசிக்கிறேன்".

ராம:—"பிறகு?"

கைலா:—"இருவரும் யோசித்து ஒருவிதமுடிவுக்கு வரலாம்"

ராம:—"வாசித்தபிறகு, சிதம்பரத்தை நாமிருவருமே பார்க்க வேண்டியிருக்கலாம்"

கைலா:—"அதற்குத் தடை என்ன?"

ராம:—"இந்தப் பாலாம்பாளேயும் பார்க்க வேண்டும்"

கைலா:—"ஆமாம். அவளுக்கு நேரில் எல்லாம் தெரியும் போலத் தோன்றுகிறது"

ராம:—"இந்தக் கட்டுமுழுமையும் படித்தும் அவள் பெயரை யே காணவில்லையே."

கைலா:—"ஆமாம்; இந்த நாவலிலும் ஒரு இடத்திலாவது பாலாம்பாளைக் குறிக்கக்கூடியதாய் ஒருவரையும் காணேன்"

ராம:—"அதுதான் ஆச்சரியம்! இந்தக் கேஸில் அவளுக்கு என்ன சம்பந்தம் இருக்கலாம்?"

கைலா:—"அதுதானே தெரியவேண்டியிருக்கிறது: இவள் யார்? தவிர இந்தச் சம்பந்தம் யார் என்றும் தெரியவேண்டும்"

ராம:—"சம்பந்தம் யாராய் இருக்கலாம்? அவனைத் தெரிந்து தான் என்ன?"

கைலா:—"இந்த நிலைமையில் என்ன சொல்லுகிறது? ஆனால் இவனுக்கு இவ்விஷயங்கள் முழுமையும் தெரிந்திருக்கவேண்டும்"

ராம:—"ஓஹோ! நீ சொல்வது வாஸ்தவந்தான். இந்தநாள் மனிதனுல் இருபது வருஷத்திற்கு முன்நடந்ததை விவரமாய் எவ்விதம் எழுதக்கூடும்? நேரில் தெரிந்தவனுகத்தான் இருக்க வேண்டும். ஒருவேளை இந்த நாவல் வெளியான பிறகுதான், பாலாம்பாள் இந்தக்கடிதம் எனக்கு எழுதியிருப்பாளோ?"

கைலா:—"ஆமாம். எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. ஒருவேளை, 'தனக்குச் சந்தேகமான ஒருவன் 'சம்பந்தம்' என்ற பெயர் வைத்துக்கொண்டு இந்த நாவல் எழுதி இருக்கலாம்' என்று பாலாம்பாள் சந்தேகித்திருக்கலாமோ?"

ராம:—"இன்னொரு விதமாயும் இருக்கலாம். பாலாம்பாளே, 'சம்பந்தம்' என்ற பெயருடன் இந்த நாவல் எழுதி இருக்கலாகாதா? இந்நாளில் ஸ்திரீ ஜாதிகள் புருஷர் பெயர்வைத்து எழுதுவதும், புருஷர்கள் ஸ்திரீகளின் பெயரைவைத்து எழுதி வெளியிடுவதும் சகஜமல்லவா?"

சற்றுநேரம் இருவரும் தத்தமக்குத் தோன்றியவாறெல்லாம் யோசித்துக்கொண்டிருந்தார்கள்; பிறகு,

கைலா:—"சரி. இப்பொழுது ஆலோசிப்பதில் யாதொரு பயனுமில்லை. முதலாவது—நாம் படிக்கவேண்டியதைப் படித்து விட்டுப் பிறகு கலந்து கொள்வோம்"

கைலாஸம் இது கூறவும், இருவரும் பிரிந்து அவரவர்களுக்கு ஏற்பட்டவைகளைப் படிக்க ஆரம்பித்தார்கள்.

ஆறவது அத்தியாயம்.

போனது போகட்டும்.
The Past Begone.

மனிதனுடைய ஜீவயாத்திரையில், சில சமயங்களில், முன் பின் செல்ல முடியாமல் தியங்கும்படி, பல இடையூறுகள் ஸம்பவிக்கின்றன. 'பின்செல்வோம்' என்றாலும், மனிதன் வாழ்வில் பின் செல்வதென்பது கிடையாது. யாதொரு இடையூறும் நேரிடாவரை, மனிதன், தான் **ஸ்வதந்தரன்** என்றும், தன் செயலாலே எல்லாம் நடத்திக்கொள்ளலாம் என்றும் நினைக்கின்றான். ஏதேனும் இடையூறு நேர்ந்து தியங்கும்பொழுதுதான், தான் **பராதீனன்** என்றும், தனக்கு அடங்காததும் தன்னை அடக்கக்கூடியதுமான ஓர் அற்புத சக்தி தன்னை ஒரு சூத்திரப்பாவைபோல் ஆட்டிவைக்கின்றது என்று உணருகிறான்.

இதுவரை, நமது கிழவராகிய வக்கீல் சிதம்பரம், தம் புத்தி யூகத்தால் எல்லாக் காரியங்களும் தம் வழிப்பட நடத்திவந்தார். மங்களபுரம் கொலை நடந்து இருபது வருஷங்கள் ஆயின. எத்தனையோ மாயங்களைப்போல், இதுவும் ஒரு மாயக்கதையாய் மறந்து போயிற்று. தம்மால் கூடியவரை ராமஸ்வாமி பாலாம்பாளைச் சந்திக்காமலும், இக்கொலை விஷயம் அவன் அறியாமலும் இருக்க எவ்வளவோ முயன்று வந்தார். தம் புத்தி யூகத்தால் தமது எண்ணம் குறைவற நிறைவேறி வருவதைப்பற்றித் தம்மை அடிக்கடி புகழ்ந்தும் கொள்வார். ஆயினும் "விதியை மதியால் வெல்லமுடியுமா?" தம்முடைய புத்திஹீனத்தையும், தைரியக்குறைவையும் வெளிப்படுத்த விதி ஸங்கல்பம் செய்திருப்பதாய்ச் சிதம்பரம் உணருங்காலம் வந்தது. கைலாஸமும், ராமஸ்வாமியும் தல்லாகுளத்தில் சிதம்பரம் இருந்த பங்களாவுக்கு வந்து சேர்ந்து தாம் வந்துள்ள செய்தியை அவரது குமாஸ்தா மூலம் அவர்க்கு அறிவித்தனர்.

" 'கைலாசம்'—'ராமஸ்வாமி'—நான்தான் கட்டைத் தூக்கித் கொடுத்து விட்டேனே. இன்னும் ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறார்கள்?" என்று முணுமுணுத்துக்கொண்டும், மனமில்லாமலும், 'சரி! வரச்சொல்' என்றார். குமாஸ்தா மறைந்ததும், சிதம்பரம், அறையில் முன்னும் பின்னும் பரபரப்புடன் நடந்துகொண்டும்,

இன்ன செய்வதென்று தோன்றாமல் அடிக்கடி தலையைப் பிடித்துக் கொண்டும், "என்னவோ, தலைவிதிப்படி நடக்கிறது. நாமென்ன செய்யலாம்!" என்று விதியின்மேல் கடைசியாகப் பாரத்தைபோட்டு, ஏதேதோ சிந்திக்கலானார். அவர்முகத்தினின்று இயற்கையாயுள்ள குதூகுலம்போய், ஒருவிதப் பயங்கர விகாரம் ஏற்பட்டுவிட்டது. கைலாஸமும், ராமஸ்வாமியும் உள்ளே நுழைந்தார்கள். "வா அப்பா ராமஸ்வாமி!—கைலாசம்! வா." என்று வந்தவர்களை உபசரித்து, "நீங்கள் வருவீர்களென்று இப்பொழுதுதான் யோசித்துக்கொண்டிருந்தேன்" என்றார். மூவரும் நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள்.

கைலா:—"நான் வருவேன் என்று தங்களுக்குத் தோன்றக் காரணம் இல்லையே!"

சிதம்:—"வாஸ்தவமாய் நீயும் வருவாயென்றே நான் நினைத்தேன். நான் கொடுத்த கட்டை நீங்கள் இருவரும் படிப்பீர்கள். அதில் ஏதாவது சந்தேகம் இருப்பின் அதைத் தீர்த்துக்கொள்ள இருவருமே வருவீர்கள் என்றே நினைத்தேன். நான் நினைத்தபடியே நீங்களும் வந்தீர்கள். என் ஜோஸ்யம் சரிதானே!" என்று சொல்லிக்கொண்டு சிரமப்பட்டுச் சிறிது சிரித்தார்.

அங்குக் கூடின மூவரில் எவ்விதம் முதல் முதல் ஸம்பாஷணையை ஆரம்பிப்பது என்று தோன்றாமல் திகைத்தார்கள். துக்க விஷயத்தை ஆரம்பிக்க யார்தான் முயல்வர்? சிறிது நேரங்கழித்து,

ராம:—"தாங்கள் கொடுத்த கட்டு முழுமையும் படித்தேன்."

சிதம்:—"சரி, என்ன தோன்றுகிறது?"

ராம:—"இது ஏதோ ஒரு பெரு மாயமாய் இருக்கிறது."

சிதம்:—"நீ சொல்வது சரிதான். என்னால் கூடிய மட்டும் கொலை செய்தவனைக் கண்டுபிடிக்க முயன்றேன். யாதொரு பயனுமில்லை."

ராம:—"அப்படியானால் கொலை செய்தவன் யார்?"

சிதம்:—(சற்றுத் திடுக்கிட்டு), "அதுதான் கண்டுபிடிப்பது கஷ்டமாய் இருக்கிறது. எனக்குத் தர்மராஜாமேல்தான் சந்தேகம்."

கைலா:—"எதனாலே?—கொலை நடந்த இரவு முதல் அவன் மறைந்து விட்டதனாலேயா?"

சிதம் :—"ஆமாம். அதனுலேதான்."

கைலா:—"பிறகு அவனைக் காணவே இல்லையே ?"

சிதம்:—"இல்லவே இல்லை. பத்திரிகைகளில் இனும் கொடுப்பதாய் விளம்பரம் செய்தோம். மூலைக்கு மூலை துப்பு வைத்தோம். ஒன்றும் பயனில்லை. அவனைக் கடைசியாய்ப் பார்த்தது ஜானகியம்மாள்தான். அன்று கொலைநடந்த இராத்திரி இரண்டு மணிக்கு, உத்ஸவம் பார்த்துத் திரும்பிவந்து அவளைப் 'பத்மவிலாஸ்'த்தில் கொண்டுவந்துவிட்டுப் போனவன்தான். அதன் பிறகு—"

ராம:—"அதனுலே உங்களுக்கென்ன தோன்றுகிறது ?"

சிதம்:—"ஏற்கனவே உன் தகப்பனருக்கு அவள்மீதும் அவன் மீதும் சந்தேகம். அன்றிரவு உன் தாயாரும், தர்மராஜுவும் ஏகாந்தமாக இருப்பதைக் காணச் சகியாமல் உன் தகப்பனர் கடிந்து பேசி இருக்கலாம். கலகம் உண்டாயிருக்கலாம்—உன் தகப்பனர் கொலையுண்டிருக்கலாம்.—பிரேதம் வைகையாற்றில் கிடத்தப்பட்டிருக்கலாம்—தர்மராஜுவும் ஓடிப்போய் இருக்கலாம். நான்கு நாட்களுக்குப் பின்னர் உன் தகப்பனரின் பிரேதம் அகப்பட்டதல்லவா ?"

ராம:—"அந்தக் காலத்தில் இப்படித்தான் மற்றவர்களும் அபிப்பிராயப்பட்டார்களோ ?"

சிதம்:—"அப்படித்தான் அநேகர் அபிப்பிராயம்."

கைலா:—"அப்படியானல் ஜானகியம்மாள்பேரில் கேஸ் வருவானேன் ?"

சிதம்:—(பரபரப்புடன்) "கேஸ் முழுமையும் நீ வாசித்திருந்தால் இவ்விதம் கேட்கமாட்டாய். [illegible] அவள் தர்மராஜுவோடு இருந்திருக்கிறாள். கொலை நடந்தது வாஸ்தவம். தர்மராஜுவும் ஓடிவிட்டான். அவள் கொலைக்கு உதவியாகவாவது இருந்திருக்க வேண்டுமென்ற சந்தேகந்தான். ஆனால் 'குற்றமில்லை' என்று அவளுக்கு விடுதலையும் ஆயிற்று."

கைலா:—"எப்படி [illegible] பெற்றாள்?"

சிதம்:—(வருத்தத்துடன்) "[illegible] அவளைக் கொன்றுவிட்டது! அசடு!—ராமஸ்வாமி!—உண்மையைச் சொல்லுகிறேன் என்று வருத்தப்படாதே—அவள் அசடே

யொழிய இப்படிப்பட்ட கொலைபாதகத்திற்கு உடந்தையாயிருக்கக் கூடியவளல்லள். உங்கள் வீட்டுக்குத் தர்மராஜு வரும் வரை அவளுக்கு உன் தகப்பனார்மேல் எவ்வளவு அன்பு !”

கைலா:—“ அதுதான் சம்பந்தத்தின் அபிப்பிராயமும்.”

சிதம்:—“ சம்பந்தம்! இந்தக் கேஸில் அவன் பெயரே கிடையாதே !”

ராம:—“பாலாம்பாள் பெயருமில்லை!”

சிதம்பரம் திடுக்கிட்டு, ராமஸ்வாமி மனதை அறிய அவனை ஒருதரம் ஏற இறங்கப்பார்த்து ஒன்றும் அறிந்துகொள்ளமுடியாமல் சிரித்து, “பாலாம்பாள் இருக்கட்டும். சம்பந்தம் யார்!” என்றார்.

கைலா:—“ சம்பந்தமா ! ‘விதியின்பயன்’ என்ற நாவல் எழுதினவன் ”

சிதம்:—“ நாவலா !”

கைலா:—“ ஆமாம். தமிழ் நாவல். அதில் இந்தக் கொலை முழுமையும் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது ”

சிதம்:—“இது ஆச்சரியந்தான். ஒருவேளை அந்தக் காலத்துப் பத்திரிகையிலிருந்து விஷயமறிந்து, அவ்விஷயத்தையே ஒரு நாவலாக அவன் ஜோடித்திருப்பானோ? அதை நானும் வாசிக்க வேண்டுமே. அஃதென்ன! ‘விதியின் பய’னு! சரி!—என் பெயர் அதில் வந்திருக்கிறதா!”

கைலா:—“ஆமாம். துரைசாமியென்று—”

சிதம்:—(சிரித்துக்கொண்டு) “ஓஹோ ! அந்தச் சம்பந்தத்துக்கு என்பேரிலும் தயவுபிறந்து விட்டதா ! சரி. கொலை செய்தவன் யார் என்று சொல்லப்பட்டிருக்கிறது?”

கைலா:—“துரைசாமியே கொலை செய்ததாக—”

சிதம்பரம் தம் காதில் நாராசத்தையே காய்ச்சி ஊற்றினால் போலத் திடுக்கிட்டார். சிறுவர்கள் இருவரும் அவரது மனோவிகாரங்களை ஆவலுடன் கவனித்தார்கள்.

சிதம்:—“ இந்த மட்டாவது நான்தான் கொலை செய்தவன் என்று எழுதினானே சம்பந்தம். மிகுந்த சந்தோஷம். சரி, நானாவது அந்தத் துரைசாமியாவது கொலை செய்வதற்கு என்ன காரணம் கற்பிக்கிறான்?”

கைலா:—"ஜானகியம்மாள் பேரிலுள்ள காதல்தான்."

சிதம்:—(சிரமப்பட்டுச் சிரித்துக்கொண்டு) "ஆஹா! சரிதான். இதெல்லாம் அந்தத் தர்மராஜுவின் வேலைமானந்தான் போலிருக்கிறது. சரி! நான் அந்த 'நாவ'லைப் படித்துப் பிறகு அதை எழுதினவன் யார் என்று அறிந்து—"

கைலா:—"அது நாங்கள் செய்துகொள்ளுகிறோம்"

சிதம்:—"நீயும் ராமஸ்வாமியுமா?"

கைலா:—"ஆமாம். இதைக் கடைசிவரையில் கண்டுபிடிக்காமல் விடுவதில்லை."

சிதம்:—"முடியவே முடியாது! வருஷம் இருபது ஆயிற்று."

ராம:—"எவ்வளவானால் என்ன? முடியாமலா போகும்!? 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்'. நேரே பார்த்தவர்கள் தாங்களும் பாலாம்பாளும் இருக்கின்றீர்களே!"

சிதம்:—"ஆம்! ஆம்!!. ஆ!—பாலாம்பாள்—மறந்துபோனேனே.—ராமஸ்வாமி! இந்த விஷயத்தில் என்னால் என்ன உதவிசெய்யக்கூடுமோ அதைச் செய்யத் தயார். உன் தகப்பனர் எனக்கு ஆத்ம சிநேகர்.—ஆனல் அந்தக் காலத்திலேயே என்னாலும் எவராலும் ஏதும் செய்ய முடியவில்லை. இவ்வளவு காலத்திற்குப் பிறகு இப்பொழுது என்ன செய்ய முடியும் என்பதுதான் கொஞ்சம் சந்தேகம்."

ராம:—"அந்த விசாரம் தங்களுக்கு வேண்டாம். நானும் கைலாஸமும் பார்த்துக்கொள்ளுகிறோம். அப்போதைக்கப்போது தங்களால் இயன்றவரை சந்தேக நிவர்த்திமாத்திரம் செய்துகொண்டிருங்கள். அது போதும்."

சிதம்:—"அதற்கென்ன தடை? எதுவும் கேளுங்கள்."

ராம:—"முதலாவது: இந்தப் பாலாம்பாள் யார்? இவளுக்கு இந்தக் 'கேஸி'ல் என்ன சம்பந்தம்? அவள் பெயர் ஏன் இந்த நடவடிக்கைகளில் காணப்படவில்லை?"

சிதம்:—"அது அவளைத்தான் கண்டு கேட்கவேண்டும்."

ராம:—"சரி! அவளை நானே நேரில் கேட்டுக்கொள்ளுகிறேன்."

சிதம்பரம் திடுக்கிட்டு எழுந்து முன்னும் பின்னும் நடந்துகொண்டே சற்று யோசித்துவிட்டுத் தம் நடுங்கின கையால் ராமஸ்

வாமி முதுகில் தட்டிக்கொடுத்து, "ராமஸ்வாமி! உன்மேல் நான் எவ்வளவு அன்பாய் இருந்திருக்கின்றேன்!"

ராம:—"தடை யென்ன? என்னைப் பெற்றவரைப்போல் உற்ற வராய் இருந்தீர்கள். அந்த விசுவாசத்தை மறப்பேனு?"

சிதம் :—அப்படியானல் ஒன்று சொல்லுகிறேன் கேள்.— போனது போகட்டும்—"

ராம:—"நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே"

சிதம் :—" இந்த சமாசாரத்தை இப்படியே ஒழித்துவிடு. பாலாம்பாளை நீ பார்க்கவேண்டாம். போன சனியனை வீணில் வர வழைத்துக்கொள்வதில் பயனென்ன? நடந்தது ஏதோ மாயமாய்ப் போயிற்று. இப்பொழுதும் மாயமாய்த்தான் இருக்கின்றது. சந்திர சூரியர் உள்ளமட்டும் இது மாயமாய்த்தான் இருக்கப்போகிறது."

ராம :—" தாங்கள் வருத்தப்படக்கூடாது. எப்படியாவது கண்டுபிடிக்கவேண்டுமென்று சங்கற்பம் பண்ணிவிட்டோம்!"

சிதம்:—(பெருமூச்சுவிட்டுக்கொண்டு மறுபடியும்) "நீ புத்திசாலி யேனும் ஒன்றுகேள்: பாலாம்பாளைப் பார்ப்பது சரியல்ல."

ராம:—"ஏனே?"

சிதம்:—"அது துக்கஹேதுவாய் முடியுமேயொழிய—"

ராம:—" நான் படவேண்டிய துக்கமெல்லாம் தாங்கள் கொடுத்த கட்டை வாசிக்கும்பொழுதே பட்டாயிற்று. இனி நான் படும்படி ஒன்றுமில்லை. நான் பாலாம்பாளைக் கட்டாயம் பார்க்கவே போகிறேன். இந்த விஷயத்தில் தாங்களும் வேண்டிய உதவிபுரிவ தாய் வாக்களித்திருக்கிறீர்கள் ?"

சிதம்:—"நான் அதற்குப் பின்வாங்கவில்லை. ஆனலும் எனக்கு ஐம்பது வயதாயிற்று. உன்னைப்பார்க்கிலும் எனக்கு உலக அனு பவம் மிகுதி. நீ செய்யப்போவதால் விளையும் கெடுதி, நீ சிறுபிள்ளை யாதலால், உனக்குத் தோன்றவில்லை. என் புத்தியைக்கேள்: பாலாம் பாளைப் பார்க்கவே வேண்டாம். இந்தக் கொலை, மறந்தது மறந்த படியே போகட்டும்"

எவ்வளவு சொல்லியும் கேளாமல் மறுநாள் பாலாம்பாளைப் பார்த்தே தீருவதாய்ச் சொல்லி இருவரும் சிதம்பரத்தினின்று விடை பெற்றுச் சென்றார்கள்.

ஏழாவது அத்தியாயம்.

பாலாம்பாள்.

Balambal.

பெரிய ஸமுத்திரத்திற் புசலும் அமைதியும் மாறி மாறி வருவதுபோல, மனிதன் வாழ்விலும், இன்பமும் துன்பமும் கலந்தே வருகின்றன. கடலின் அடியிலுள்ள வஸ்துக்கள் எப்படிப் புலப் படாவோ, அவ்வாறே, மனிதன் அகத்திலுள்ள எண்ணங்கள் அவனு லேயே அன்றிப் பிறனுல் அறியப்படா. மேற்சொல்லிய விதிக்கு, நமது வக்கீல் சிதம்பரத்தின் வாழ்வே ஓர் நிதர்சனமாய் விளங்கிற்று

ஆயினும், முன் அத்தியாயத்தில் கூறிய சம்பாஷணை நடக்கும் காலத்தில், எவ்வளவோ அனுபவமுள்ள சிதம்பரம், தம் அகத்துள்ள வைகளைத் தம் வாயால் வெளியிடாமல் பாதுகாத்தாராயினும், அவைகளை அவருடைய முகவிகாரங்களால் நுட்ப அறிவுள்ள கைலாஸம் கொஞ்சம் அறிந்துகொண்டான். கைலாசம் உள்ளே நுழையும்பொழுது சிதம்பரத்தின்மேல் அவ்வளவு கெட்ட எண்ணம் கொள்ளவில்லையாயினும், சம்பாஷணை முடிவில் சிதம்பரத்தைப்பற்றி அவ்வளவு நல்ல எண்ணத்துடன் வெ..ரியேறவில்லை.

சிதம்: – (தனக்குள்) "இந்த ராமஸ்வாமியைப்பற்றி அவ்வளவு கவலை இல்லை. ஆனல் இந்தச் சிறு வக்கீல் கைலாஸத்தைப்பற்றிக் கொஞ்சம் பயமாய் இருக்கிறது." (சற்று யோசித்துவிட்டு மறுபடி கோபத்துடன்) "ஆஹா! இந்தச் சண்டாளி, பாலாம்பாள் வைத்த தீ அல்லவா இவ்வளவும்? இது எவ்வளவு தூரம் பற்றி எரியப் போகிறதோ! சரி இருக்கட்டும், இனி இந்தப் பாலாம்பாளைக்கண்டு நயத்திலாவது, பயத்திலாவது அவள் வாயை மூடவேண்டும்."

இவ்வாறு சிந்தித்துக்கொண்டு வண்டிக்குச் சொல்லி அனுப் பினர். வண்டி சின்னுழிகையில் தயாராய் வந்துவிட்டது. "என்ன ஆச்சரியம்! இந்த ஐம்பது வருஷம் அனுபவம் இருந்தும்—நேற் றுப் பயல், இந்தக் கைலாஸம்—இவனுக்கா பின்வாங்குவது? பையன் இப்பொழுதுதான் காலேஜ் விட்டுவந்த முறுக்குடன் இருக் கிறுன். உலகமே தெரியவில்லை. சரி! பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று சொல்லிக்கொண்டு வண்டி ஏறிப் புறப்பட்டார். போகும் வழியில் அவர் கைலாஸம் ஜாகை வழியாய்ச் சென்று ராமஸ்வாமி

யும் அவனும் இருக்கிறார்களா என்று விசாரித்து, அவர்களிருக்கும் விஷயம் அறிந்தனர். பிறகு அவர், 'அவர்களைத் என் தொந்தரவு செய்யவேண்டும்?' என்று யோசித்துத் தம்வழியே சென்றார். சற்றுநேரத்துக்கெல்லாம், வண்டி, பாலாம்பாள் 'ஜாகை' வந்து சேர்ந்தது.

தென்னை, மா, கமுகு முதலிய விருக்ஷ ஜாதிகளும், மல்லிகை, முல்லை முதலான பூஞ்செடிகளும் நிறைந்த ஒரு சிறு தோட்டத்தின் மத்தியில் கட்டப்பட்டுத் தற்கால நாகரிகத்துக்குத் தக்கபடி தட்டு முட்டு சாமான்களாலும், விநோத படங்களாலும், திரைகளாலும் அலங்கரிக்கப்பட்ட ஒரு சிறு வீடு அது. அவ்வீடு சுத்தமாயும் அதிலிருந்த சாமான்கள் ஒழுங்காயும்இருந்தன. அதனைச் சற்றுக்கவனித்தால், பாலாம்பாள் நவநாகரிகமான விஷயங்களில் ஆசையுள்ளவள் என்பது தெரியவரும். உலகத்தில் தான் ஜன்மமெடுத்தது இரண்டே இரண்டிற்கு—அதாவது சரீரசௌக்கியத்துக்கும் விஷய சுகத்துக்குமே—என்பது பாலாம்பாளுடைய அனுபோக சித்தாந்தம். விஷய சுகங்களை அளவுக்கு மிஞ்சி அநுபவித்தவளாதலின், அவள் சென்ற ஐந்தாறு வருடகாலமாகப் பிணிவாய்ப்பட்டுப் பெரிதும் வருந்திவரலாயினள். இக்காரணத்தால், இப்பொழுது 40 வயதுள்ள அவள் 50 வயதினள்போல் காணப்பட்டாள். நோய் வந்தகாலம் முதல், கோவில், குளம், உத்ஸவம் என்று முன்போல் வெளியேறுவதே கிடையாது. என்ன பொருள் இருந்தாலும், சரீர சௌக்கியமும் மன உத்லாசமும் இல்லாவிட்டால் மற்ற சுகங்களெல்லாம் துக்கமாகவே காணப்படுமல்லவா?

ஒரு நாள் மாலையில் ஒரு மாமரத்தடியில் போட்டுள்ள சலவைக் கல்லில், பாலாம்பாள் உட்கார்ந்துகொண்டு, தான் முன் அனுபவித்த சுகங்களையும், இந்த ஐந்தாறு வருஷகாலமாய்த் தான் வியாதியால் வருந்துவதையும், அதனால் தன்னை 'வக்கில்' சிதம்பரம் எட்டிக்கூடப் பாராமல் கைவிட்டதையும் நினைத்து நினைத்து வருந்திக்கொண்டிருந்த தருணத்தில், திடீரென்று சிதம்பரம் வந்து சேர்ந்தார். பாலாம்பாள் அவரை 'வாருங்கள்' என்றுகூட உபசரிக்காமல் இருந்துவிட்டாள். கருமமே கண்ணாயினரான சிதம்பரம் அதை ஒரு பொருட்டாய் எண்ணாமல் அவள் அருகில் சென்று, "என்ன, பாலாம்பாள்! சௌக்கியந்தானே? என்று" சொல்லிக்கொண்டே உட்கார்ந்தார்.

பாலா:—"எல்லாம் பூர்வஸ்திதிக்குக் குறைவில்லை. எது வழி தப்பி வந்துவிட்டீரோ? உமது வீடு இது அல்லவே!"

சிதம்:—"எல்லாம் உன்னைப் பார்த்து போகலாம் என்றுதான்."

பாலா:—"சரி, பார்த்து ஆயிற்றல்லவா? வேறு விசேஷமில்லையே? போகலாமே!"

சிதம்:—(தனக்குள்) "என்ன, இவ்வளவு உஷ்ணமாய்ப் பேசுகிறாளே! (வெளிப்படையாய்) சரி, பாலா! நான் வந்த விஷயம் நீ சற்று யோசித்தால் அறிந்துகொள்ளலாம். நீ ராமஸ்வாமிக்கு ஒரு கடிதம் எழுதினை யல்லவா?"

பாலா:-"நான் அப்பொழுதே யோசித்தேன் நீர் வந்த காரணம். சோழியன் குடுமி சும்மா ஆடுமா?. ஏன்? அதற்கென்ன இப்பொழுது!"

சிதம்:—"ஒன்றும் இல்லை. ராமஸ்வாமி இவ்விடத்திற்கு வந்து விட்டான். நானை மாலை உன்னைப் பார்க்கக்கூடும்"

பாலா:—"எனக்கும் அப்படியே தகவல் கொடுத்திருக்கிறான். இது அவன் கடிதம்."

சிதம்பரம் அதைப்பார்த்ததும் தம் பேருக்கும் கீர்த்திக்கும் பழுதுவரக் காலம்வந்துவிட்டதே என்று விசனித்தார். பிறகு, அவர் ஒருவாறு மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு, அந்தக் கடிதத்தைக் கிழித்துக்கொண்டே, "ஆமாம். எல்லாம் வெளியிடுவதாகத்தான் தீர்மானித்துவிட்டாயோ!" என்னப் பாலாம்பாள் "ஆம்" என்றாள்.

இத்துணிகர வார்த்தையைக் கேட்டதும் சிதம்பரத்திற்குக் கோபத்தால் முகம் மாறியது. ஆயினும், அவர் முகத்தில் ஏற்பட்ட கடுகடுப்பை மறைத்துச் சற்றுப் புன்சிரிப்புக்கொண்டு, தீனமான குரலுடன், "அடி பாவி! நாம் எவ்வளவு நேசமாய் இருந்தோம்! எல்லாம் மறந்தாயா? இருபது வருஷத்திற்கு முன் போன ஸமாசாரத்தை இப்பொழுது ஏன் கிளப்புகிறாய்? என்னைக் கெடுக்கவா இந்த வேலை செய்கிறாய்? நான் மதுரையை விட்டு எங்கேயாவது ஓடிப்போக வேண்டியதுதான்" என்றார்.

பாலா:—(இரக்கமேயின்றிச் சிரிப்புடன்) "நன்றாய் நடிக்கிறீரே இது நாடகசாலை என்று நினைத்தீர்போலும்! பேஷ்! நான் பிடிவாதக்காரி என்பது உமக்குத் தெரியாதோ?"

சிதம்:—"நீ செய்யப்போகிற காரியம் எவ்வளவு கெடுதி விளைவிக்கக்கூடியது தெரியுமா?"

பாலா:—(அவட்சியமாய்) "நன்றாய்த் தெரியும்; எனக்கென்ன? என் அழகுகெட்டு, அருமைகெட்டு, 'இன்றைக்கோ, நாளைக்கோ' என்றிருக்கிறேன். போகும்பொழுது உங்களையும் அழைத்துச் செல்லலாம் என்றுதான் செய்கிறேன்."

சிதம்:—"பாலா! ஏனடி அம்மா இப்படி? உனக்கு நான் என்ன கெடுதி செய்தேனடி?"

பாலா:—(உக்ரமாய்) "என்ன கெடுதி! என்னைக் கெடுத்தது முழுதும் நீரல்லவா? என் கற்பும்கெட்டு, என் தேகமும் இந்த நிலைமையாய்——"

சிதம்:—"சொல்லு, என்னவேண்டுமானாலும் சொல்லு"

பாலா:—"உம்மை நம்பியல்லவோ, வீடு வாசல், அந்தஸ்து, கற்பு, மங்கைக்குரிய நாணமுதலியன இழந்து—எடுபட்டவளாய்—வயிற்றை எரிகிறதே நினைத்தால்——".

ஆத்திரத்துடன் அவள் கூறியதைச் செவியுற்றதும், மின்சாரப் பிரயோகமானது போல் சிதம்பரத்தின் உடல் முழுமையும் ஒரு தரம் நடுநடுங்கிற்று.

சிதம்:—"என்னை நம்பி நீ அடைந்த கஷ்டமென்ன? உனக்கு எவ்வளவோ சௌகரியம்செய்து வைத்திருக்கிறேனே! வீடில்லையா? சொத்து இல்லையா? என்ன குறைவு உனக்கு?"

பாலா:—"சீ! இந்த வீட்டுக்கும், உமது சோற்றுக்குமா வந்தேன்? நாய்கூட வயிறு வளர்க்கிறது. சத்திரம் சாலையில் படுத்துக் காலம் கழிக்கக்கூடாது? பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு என்ன வேண்டும்? தக்க புருஷனுடன் கூடி வாழ்வது தானே? இதில்லையானால் எது இருந்து என்ன?"

சிதம்:—"நீ அதுவும் வேண்டியபடி அனுபவித்தாய்"

பாலா:—"ஆமாம். அனுபவித்தேன். வியாதி வந்தது—எது சாக்கு என்று இருந்த நீரும் கைவிட்டீர்!"

சிதம்:—"நான் என்ன செய்வேன்! எப்பொழுதும் ஆயுள் முழுதும் உன்னுடன் இருக்க முடியுமா? எனக்குக் கஷ்டத்திற்கு மேல் கஷ்டம் வந்துவிட்டது. வேறு கல்யாணம் பண்ணியே தீர வேண்டி வந்து சேர்ந்தது"

பாலா: "சரி! நீர் சௌக்கியமாயிரும். என்னை ஏன் வந்து இப்பொழுது பிராணனை வாங்குகிறீர்?—என் வயிறு கிடந்து எரிகிறது. அதனாலேதான்——"

சிதம்:—"ராமஸ்வாமிக்கு எழுதினுய்?"

பாலா:—"ஆமாம். போது போகவில்லே. 'விதியின் பயன்' என்ற நாவலே வாசித்தேன்—"

சிதம்:—அதை நானும் வாசித்தேன்.

பாலா:—"சரி; அது எழுதிய சம்பந்தம் என்பவன் யார்?"

சிதம்:—"நானும் அதைத்தானே கண்டுபிடிக்க வேண்டு மென்று இருக்கிறேன்."

பாலா:—அதை வாசித்ததும் என்னவோ ஊீதான்றிற்று. எழுதினேன் உடனே ராமஸ்வாமிக்கு."

சிதம்:—"சரி, போகட்டும். ராமஸ்வாமி வந்தால் என்ன சொல்லப் போகிறுய்?"

பாலா:—"எனக்குத் தெரிந்ததை."

சிதம்:—"சொல்லாதே. சொன்னுல் எவ்வளவு கெடுதி நேரிடும் தெரியுமா?"

பாலா:—"உமக்குத் தானே! அவனுக்கில்லேயே!"

சிதம்:—"எனக்கு மாத்திரமா? உனக்குந்தான். ஜாக்கிரதை."

பாலா:—"சரி, எனக்கும் வந்தால் வரட்டும். சொல்லத்தான் போகிறேன்."

சிதம்:—"அவனுக்கு எல்லாம் முன்னமே தெரியுமே?"

பாலா:—"அப்படியா ?"

சிதம்:—"(சிரித்துக்கொண்டு தலேயையாட்டி) "சும்மாதானே? ஒரு பெண்பிள்ளே, நீ இந்தப்போடுபோட்டால் நான் சும்மா இருப்பேனு?"

பாலாம்பாள் திடுக்கிட்டு ஏதோ ஒரு மலே அறுந்து மயிரிழையில் தன் தலேமேல் தொங்குவதாய் உணர்ந்தாள். மறுபடி தைரியங் கொண்டு "ச்ஸ்! என்ன ஆனுலும் சரி. நான் உத்தேசித்தபடி சொல்லிவிடுகிறேன். ஆனுல் ராமஸ்வாமி கேட்பதற்கு மாத்திரம் பதில் சொல்லுகிறேன்" என்ருள்.

சிதம்:—"அவனுக்கு ஏதாவது யுக்தி சொல்லுவாயோ?"

பாலா:—"என் எண்ணம் அதுவன்று-ஆனுல், நான் என் உயிரையேவெறுத்துவிட்டேன்-நான் எது செய்தால்தானென்ன? நீர் என்னே இந் நிலேமையில் வைத்ததற்கு நான் செய்வது மட்டும் பிசகோ?"

சிதம்:—"சரி, நீ செய்வதைச் செய். எனக்குத் தெரிந்ததை நான் செய்துகொள்ளுகிறேன்."

பாலா:—"நியாயந்தானே? ஆனால் ஒரு விஷயம். உம்மை இந்தக் கேஸில் சம்பந்தப்படுத்தாமல் தக்கபடி—"

சிதம்:-'நீ யாரென்று கேட்பானே அவன்? என்ன சொல்வாய்?'

பாலா:—"என் உண்மைப் பெயரைச் சொல்லுகிறேன்"

சிதம்:—"அப்படியானால் என் தலைக்குக் கல்பிடித்துவிட்டாய்"

பாலா:—"இவ்வளவு வருஷ அநுபவமாயும் ஒரு சிறு பையனுக்குப் பயப்படுகிறீரே?"

சிதம்:—"ராமஸ்வாமியைப்பற்றி எனக்கு அவ்வளவாகப் பயமில்லை. இந்தக் கைலாசம் ஒருவன் அல்லவோ குறுக்கிட்டிருக்கிறான். சரி நான் சொல்லுகிறேன்: இதை இப்படியே விட்டுவிடு."

பாலா:—"ஒருக்காலும் முடியாது. இந்தப் பாலாம்பாள் நினைத்த காரியத்தைச் செய்யாமல்விட்டுவிடுவாளா? பேஷ்! பேஷ்!!"

சிதம்:—"அப்படியானால், உனக்கும் எனக்குமுள்ள சம்பந்தம் இன்றோடு தீர்ந்தது. இனிமேல் கால்பைசா கொடுக்கமாட்டேன்"

பாலா:—"இனிமேலா தீரப்போகிறது? அது தீர்ந்துபோய் ஐந்தாறு வருஷமாயிற்றே. அப்படிப் பயமுறுத்த வேண்டாம். இந்த வீடு என்பேரில்தான் இருக்கிறது. விற்றுத் தின்றாலும் என் ஆயுள்வரை காணும். நானே வெகுநாள் இருக்கப் போவதில்லை."

சிதம்:—"நீ சொல்லுவதெல்லாம் பொய் என்கிறேன்"

பாலா:—"சொல்லிக்கொள்ளும்"

சிதம்:—"சரிதான் உன்னைக் கீழ்ப்பாக்கம் பைத்திய ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டியதுதான்."

பாலா:—(அலக்ஷியமாய்ச் சிரித்துக்கொண்டு) "நான் எத்தனையோ பெயர்களை அனுப்பி விடுவேனே. வந்தவழியைப் பார்த்துப்போம்."

இந்த நிலைமையில் பரஸ்பரம் கோபாவேசத்துடன் இருவரும் உக்ரமாய்ப் பார்த்துக் கொண்டார்கள். சிதம்பரம் தம் காரியம் பலிக்காததால் விசனமடைந்து, "சரி, வம்புக்கு இழுக்கிறாய். உன்னால் ஆனமட்டும் ராமஸ்வாமிக்குச் சொல்லிக்கொள். எனக்குத் தப்பித்துக்கொள்ள வழி தெரியும்" என்று சொல்லி எழுந்து சற்றுத் தூரம் சென்று மறுபடியும் திரும்பிவந்து, "அந்த தஸ்தவேஜ் மாத்திரம் என் கையில் கிடைத்துவிட்டால், இவள் சாதிக்கக்கூடியது ஒன்றும் இல்லை. ஆனால் இந்த நிலைமையில்"—என்று இவ்வாறு சிந்தித்துக் கொண்டே, மனம் கலங்கினவராய் வெளியே சென்றார்

MODEST MERIT.

Full many a gem of purest ray serene
The dark unfathomed caves of ocean bear;
Full many a flower is born to blush unseen
And waste its sweetness in the desert air.

Thomas Gray.

ஆன்றமைந்தவர்.

தெளிவாகிய ஒளியேகனி திகழ்மாமணித் திரள்கள்
அளவாஇருள் கடலாழ்குகை அதிலே மறைந் துளவே.
அளியார்மலர் பலமானிடர் அறியாவெளி யதனில்
வளமாகிய நறுமாமணம் வாடப்பிறந் துளவே.

[இது "தாமஸ் க்ரே" என்ற ஆங்கில கவி இயற்றிய "Full many a gem" என்ற செய்யுளின் மொழி பெயர்ப்பும், அதனால் விளங்கும் கருத்தும் முற்றுப் பெறச் செய்தது.]

"அளவிடவும் முடியாத ஆழ்கருங் கடலினுக்
கடியினுட் குகையு னுள்ளே,
அதிசுத்த மானபிர காசஒளி உமிழ்கின்ற
அரிய மணி பல உறு"தல்போல்,
ஒளியபுக ழோடுதித் துந்தமது பெருமையும்
உறைவிடமும் ஒருவ ராலும்
உணரமுடி யாதபடி மறைநிலையில் உத்தமர்கள்
உறைவர் பலர்; அல்லா மலும்,
"அளிமுரலும் மலர்கள்பல அனுபவிப் பாரின்றி
அறியாத பாழ்வெளியி னில்
அழகுவள மணமாதி யாவுமே வீணு
அலர்ந்துபின் வாடும்" அது போல்,
எளியஅரி வையர் பிறவி எய்தியத னற்றம
திருப்பிடம் தகைமை யாதி
எவரு மறிந்துபயன் எய்தமுடி யாநிலை
இருப்பர் பல பெண் மணிகளே.

ம. கோபாலகிருஷ்ணன்.

பராந்தகன்.

ஒன்பதாங் காட்சி.

காலம்:—காலே 10 மணி.

இடம்:—சந்தை கூடுமிடம்.

பாத்திரங்கள்:—நகரவாசிகளிற் சிலர்.

ராமசாஸ்திரி:—ஹரி: நமஸ்காரம். ஆத்துலே என்ன விசேஷம்? நேத்தி ராத்திரி என்ன அந்தப்போடு போட்டேள்? ஆரெ?

அப்பு தீக்ஷிதர்:—ஒரு கூடெ செங்கலும் பிடாரியாவா இருக்கும்? அதுகளோடெ மாரடிச்சு மாரடிச்சுப் பிராணன் போறது. எவ்வளவு முட்டிக்கிண்டாலும் என்ன? சனியங்க கேக்கறதுகளா?

ராமு:—சமாசாரம் என்ன? ஆத்துலெ ஆரு ஆரெ என்ன செஞ்சா?

அப்பு:—ஒத்தரையும் ஒண்ணும் இதுவரை நல்லவேளையா ஒண்ணும் செய்யல்லே. ஏதோ பெரியவா செஞ்ச சிவபூஜைதான் இதுக்குக் காரணம்.

ராமு:—நீர் கத்தின கத்தெப் பார்த்தா, ஏதோ பிரமாதமா நடந்துடுத்து இன்னு நெனச்சேன். ஒண்ணுமில்லாததுக்கு அடையாளமா இது? சொல்லாதேபோனாப் போமே.

அப்பு:—நம்பாத்து ஸமாசாரம் ஒண்ணுமில்லெகாணும். இருந்தாச் சொல்லமாட்டேனா?

ராமு:—பின்னெ, ஆராத்துலே என்ன நடந்தது?

அப்பு:—ஓம்மபாடு தேவலே. ஆப்பிட்ட பூரி தக்ஷிணைகளே வாரிச் சுருட்டி வளேச்சுப் போட்டுக்கிண்டு, சாப்பிட்டேட்டுச் சாப்பிட்டேட்டுத் தொந்தியைத் தடவிக்கொண்டு ஒக்காந்திருக்கீர். ஒமக்கு ராமன் ஆண்டா என்ன? ராவணனாண்டா என்ன? ஓம்ம காரியம் எப்படியோ நடந்துட்ரது. ஊராருடைய நலம் பொலத்தைப்பத்தி ஒமக்கேன் விசாரம்?

ராமு:—சரி. எல்லோருக்கும் பதிலாக விசாரப்பட நீர் ஒத்தர் இருக்கறதே போரும். நீர் படும் விசாரத்தைச் சொல்லும் சீக்கிரம். எனக்கு எவ்வளவோ காரியமிருக்கு.

அப்பு:—வேறொண்ணுமில்லே. நீரே சொல்லும்: ஆடிக்காத்துலெ அம்மிக்கல்லு பறக்கிறபோது, எலவம் பஞ்சு என்னபாடு படாது? ராஜாதி ராஜனுடைய பொண்பாடே அந்தாத்துக்கு வந்தூடுத்து. நம்பாத்துப் பொண்டுகளுக்கு என்ன துணிச்சல்பாரும். இதுகளுக்கு நாளாம்! கிழமையாம்! சாமியாம்! அலங்காரமாம்! முத்துச்சொருக்காம்! பல்லாக்காம்! மாவெளக்காம்! புராணமாம்! கோவிலாம்! குளமாம்!—குட்டி ஞானம் குடியைக் கெடுக்கறது. ஒண்டி சண்டியாக்கூட ஓடிப் போரதுகள். அத்தனைக் காவலோடே அத்தனைபேரும் இருக்கறபோது நடந்ததெ நெனச்சாலே நடுங்கலியா தேகம்? ஆருதான் வந்தோனோ? எப்படித்தான் வந்தானோ! அவளெ என்னதான் செஞ்சானோ! பூனையைக்கண்ட கிளி போல எப்படிப் புலம்பித் தவிச்சாளோ அவள்! ஈசுவானுக்குத்தான் வெளிச்சம். நம்பாத்துச் சனியன்கள்—உங்களாத்துப் பேரையுந்தான் சேத்துச் சொல்ரேன். கோவிச்சுக்காதேயும். உள்ளத்தைச் சொல்ரேன். சொல்லாதே இன்னு சொல்லல்லே எனக்கேன் வீண் பொல்லாப்பு?—இதுக எக்கச்சக்கமா ஆப்பிட்டுக்கிண்டதுகள் இன்னு வச்சுக்கும். அப்போ, போக்கிலி சாக்கிலிகள் ஏதாவது செஞ்சூட்டா என்ன செய்பரது?—உசுர் போச்சு; மானம் போச்சு; நாம்பளும் நாக்கெப் புடுங்கிக்கிண்டு சாகவேண்டியவாதானே? இதைச் சொன்னாக் கழுதெகளுக்குத் தெரியாதா?

ராமு:—(சிரித்து) நன்னாருக்கு! நன்னாருக்கு. உம்மைப்போல் பயங்குளியை நான் பார்த்ததே இல்லே. எடுத்ததுக்கெல்லாம் பயம். எடுத்ததுக்கெல்லாம் சந்தேகந்தான். எத்தனை பொண்டுகளை—நம்பாத்திலே இல்லாதெ போனாப் போறது; வேறே ஆராத்திலே யாவது—இதுவரை நீர் சொன்னபடி செஞ்சிருக்கு? செஞ்சிருந்தா, செஞ்சவன், திடுதிப்புன்னு செஞ்சிருப்பன்? அவன் எதுக்காகச் செஞ்சானோ? அவனுக்கு என்ன வயத்தெரிச்ச லிருந்ததோ? கொலைகாரங்களும் கொள்ளக்காரங்களும் ஒங்காத்துப் பொண்டுகெகிட்டேயும் எங்காத்துப் பொண்டுகளிட்டேயுமா வரப்போரான்?

சுப்பு:—ஆருகண்டா? ஐயமுள்ளவரை பயமில்லெதான். ஒருவேளை விதி அப்படி இருந்தூட்டா?

ராமு:—அப்போ, நீரும் நானும் கவலெப்பட்டுப் பிரயோசனம்?

சுப்பு:—இருந்தாலும் நாம்ப கூடியமட்டும் ஜாக்கிரதையாத்தானே இருக்கணும்? விதியிருந்தா விட்டுப்போமா இன்னு, நீராவது, ஓங்காத்துக்காரியாவது, பாம்புப் புத்துலே கையெ வையுங்கோ பாப்போம்.

ராமு:—அப்படியா சொல்ரது? ஆரும் ஜாக்ரதையாத்தான் இருக்கணும். இருந்தாலும் இந்த பயம் ஆகாது. என்ன, நம்பாத்துப் பொண்டுக என்ன நகை காய்ச்ச மரங்களா? ரதிகளா? இல்லெ, ஆரோடேயாவது நமக்குப் பகையா? ஓம்ம புத்தி என்ன புத்தி காணும்! இப்போ ஒண்ணு எனக்கு ஞாபகத்துக்கு வர்றது: நவாபு காலத்துலே அழகிகளையெல்லாம் புடிக்கப்போரான் இன்னு ஆரோ கட்டிவிடவே, உடனே ஒடிஒளிஞ்சுதுகளாம் ஆந்தையும் குரங்கும்! ஏன்! எப்படியிருக்கு! பொண்டுகள் புடிக்கி இதுகளெத்தானே பாத்துப் புடிப்பங்கள்!—ஓம்ம பேச்சை ஆராவது கேட்டாச் சிரிக்கப்போரா. பொண்ணாப் பொறந்தவாளைப் பத்திய பயம் ஓமக்கு வேண்டாம். ஈசுவரோ ரக்ஷது. ஓம்மெ முதல்லெ ஜாக்கிரதையாப் பாத்துக்கும்.—எனக்குக் காரியம் ரொம்ப இருக்கு. தொன்னைக்கு முக்தல் எலெ வாங்க வந்தேன். லக்ஷ்மணையனாத்துலே பிராமணார்த்தம். போறேன். அபிசாரணத்துக்கு ஆள் வேணும். ரெண்டுபேரையாவது கூட்டிக்கிண்டு வந்துசேரும். ஆலஸ்யம் வேண்டாம். தாமஸமா வந்தா தக்ஷிணை குடுக்கமாட்டா. [இருவரும் போகிறார்கள்.]

ஆறுமுகம்:—சாமி நல்லாச் சொல்லிச்சு.

பெருமாள்:—ஆமா. அம்ப பொம்பளெககிட்ட எவன் வருவான்? என்னத்துக்கு வாரான்?

சோழ:—என்ன அண்ணே! ஆரு ஆரெ என்ன செஞ்சாகளாம்?

ஆறு:—நேத்திப் பாத்தோமே ஒரு சாகப்போற கெளம், அது ஒருவேலெ செஞ்சிடிச்சாம். இந்தக் காலத்துலே ஆரெ நம்பரது?

சோழ:—அந்த நோஞ்சப்பயலாலே என்னண்ணே முடியும்? அவன் என்ன செஞ்சானாம்?

பெரு:—அதுதானே விசேசம். ராசா பொண்ணைக் கொலை செய்ய இண்டு ஆரோ பொம்பளெவேசம் போட்டுக்கிட்டு வந்தானாம். இது கெளவனுக்குத் தெரிஞ்சிடிச்சாம். கெளவன் அவனைக் குத்திக் கொலெசெஞ்சு போட்டானாம்.

முரு:—நீங்க இதெ நம்புறீகளா? அவன் அம்புட்டு நல்லவனின்டா, அந்தப் பொண்ணெ ஏமாத்தி, வெளியிலே இருந்தவளெ; என் அண்ணெ உள்ளெ மெனக்கிட்டு கூட்டிக்கிட்டுப் போறான்? அவன் யோக்கியனு இருந்தா ஒடனே ராசாகிட்ட ஓடி 'மாராசா! இப்படி இப்படி சமுசாரம்' இண்டு சொல்லியிருக்க மாட்டான்? எம்புட்டெம்புட்டோ எனும் அவனுக்குக் கெடச்சிருக்குமே! அதுமட்டுமா? ராசாவுடைய ஆளுக, கொலகாரப்பயலெ, அப்பலே, அங்கேயே புடிச்சுப் பின்கட்டுமொறயாக் கட்டியாந்து தூக்குலே போட்டிருக்க மாட்டாக?

சோழ:—பின்னெ, ஒனக்கென்ன தோணுது?

முரு:—வந்தவனும் செத்தவனும் கூட்டுகளவாணிக—ரெண்டுபேரும் கொலைபாதகப் பயகதான். செத்தவனைக் குத்திக் கொண்டது கெளவனே இல்லெ. ராசா மகதான். இப்படிச் சொல்றேனே இண்டு யோசிக்கவே மாணும். அதுக்கிருக்கிற சாமார்த்தியம் ஆம்பளைகளுக் கேது!: வீராதி வீரங்களும், வில்லாதி வில்லங்களும், முக்கிமுக்கிப் பார்த்தும், கொல்லமுடியாத, பதினறடி வேங்கையே, ஒரே போட்டிலே, அரை நிமிசத்திலே, குத்திக் கொன்னு போட்டவ இல்லெ நம்ம ராசாமக? அரைநாளியாவது, ஆயுதமில்லாதெ அவளெ ஆர்நாச்சும் பாத்திருக்கீங்களா? மீசெ மொளச்சவகளெல்லாம் ஆம்பளெகளாய் விடுவாகளா? பூனைக்குட்டிக் கில்லையா மீசெ? எலிக்குஞ்சுக்கில்லியா?

ஆறு:—அப்படிண்டா, பொம்பளெ வேசம் போட்டுக்கிட்டுவந்த அந்தத் தடியனெக் குத்திக்கொன்னவ, அவன் கூட்டாளி-கெளவ வேசம் போட்டவனைமட்டும் ஏன் உட்டுட்டா?

முரு:—அப்படிக்கேளு. ஏனு? பொம்பளெ வேசக்காரனெக் கொல்ற போதே, கெளப்பய, திடீரெண்டு கொமரனுப்போய், பசக்கிண்டு, அவ கையிட்டியெப் புடுங்கிக்கிட்டு, வாயிலே நல்லாத் துணியெ வச்சடைச்சிட்டான். சாகப்போற இளமிண்டு அந்தப்பெண்ணு நெனச்சிக்கிட்டிருந்துதேதவிர இப்படியெல்லாம் நடக்குமிண்டு கனவாவது கண்டிருக்குமா அது?

பெரு:—சரி. அப்படியே வச்சுக்குவம். ரெண்டு பயகளும் அவளெக் கொல்லந்திருந்தா கெளவ வேசக்காரன், அவளெயே அப்போதெயில்லே, வேலெயச் சாச்சிருக்கணும்? ஏன் உட்டுட்டான்?

ஆறு:—கொலகாரங்களுக்குக்கூட சிலசில சமயம், மனசு இரங்குமிண்டு, சாத்திரியாரு எத்தனையோ கதை சொல்லக் கேட்டிருக்கோமில்லே? அவுகளிலே ஒருத்தன்போல இருக்கும் இவன்.

முரு:—இல்லே இல்லே. பய கொலே செய்யத்தான் பாத்திருக்கான். அதுக்குள்ளெ அந்தப் பொண்ணெப் பாத்துட்டான். அவ அளகெப் பாத்ததும் சொக்கிப்போயிட்டான். மேக்கொண்டு பயலுக்கு ஒண்ணும் ஓடல்லே. அதுனாலேதான் அவ தப்பிச்சுக்கிட்டா.

வேலு:—நீ சொல்றது விளங்கலியே. ரொம்ப அளகுதான் அவ. அதுனாலே அவ எப்படி தப்பிச்சுக்க முடியும்?

முரு:—(சுற்றிலும் பலமுறை பார்த்து) நான் இப்பொ சொல்ற சேதி அம்புளுக்குள்ளேயே இருக்கட்டும். சாமி கும்புடப்போன இந்தப் பொண்ணு, வெள்ளிக்கெளமை ராத்திரி, 10-மணிக்குமேலே அரமனைக்கி வந்திச்சாம். வாரபோதே, அளுது அளுது அதுக்கு மூஞ்சி வீங்கிப் போச்சாம். ராசாகிட்டேயும் ராசாத்தி கிட்டேயும் தோட்டத்துலெ நடந்த சேதி அம்புட்டும் ஒண்ணுவிடாதே சொல்லிச்சாம். அரமனை தெளிக்கிற மாரி எதுத்த வீட்டு அங்காயி இடத்துலே அரமனேலே நடந்த அம்புட்டுச் சமுசாரத்தையும் சொல்லிச்சாம். இதெ எங்க வீட்டுப் பொம்பளே கேட்டுக்கிட்டிருந்திச்சு. அது எங்கிட்டச் சொல்லிச்சு. ராசா மகளெ, அவ அளகெக் கண்டதும், பய, மயங்கிப்போய், இறுக்கிக்கட்டிப்புடிச்சு அவ கத்தக் கத்த ஒரு முத்தம்கூடக் குடுத்தானும். இது நான் சொன்னேனுண்டு தெரியவேணும். அம்பளுக்கேன் பெரியெடத்துப் பொல்லாப்பு? தலையேபோனாலும் போயிடும்.

ஆறு:—இருக்கும் இருக்கும். இதெல்லொம் சொல்லுவோமா?

பெரு:—அப்படி யிண்டா, இந்தப் பயகளெ, ஆரு கொல்லச்சொல்லி அமுத்தி யிருப்பாக.

முரு:—என்ன, இப்படிக் கேக்கரே? நம்ப ராசாவுக்கு விரோதிக ஒத்துரா, ரெண்டுபேரா? அவுகளிலே ஆராவதுதான் செஞ்சிருக்கனும். இன்னேண்ணில்லெ. ராசாவுக்கும் கௌக்கொமாரனுக்கும் பகை யிண்டும், அதுக்காகவே அந்தப் பய, ராசாவுக்கு எவுக ஆகாதவகளோ, அவுகளெ அண்டி யிருக்கிறானிண்டும், அவனே அந்தப் பொண்ணுகிட்டச்சொன்னனும். இதெயும் அந்தப் பொண்

அரமனேலே சொல்லிச்சாம். சமுசாரம் இப்படி யெல்லாம் இருக்காபோது, ஆரு செஞ்சிருந்தாத்தான் என்ன? இன்னும் பாரு: மாராசவுக்குப் பின்னே பட்டங்கட்டிக்க எத்தனை பேரு வேலே செய்ருக? அவுக செய்யவேண்டிய மொத வேலையில்லெ இது? மொதலாவது இந்தப் பொண்ணுடைய உசிரைப்போக்கணும். இதானவுடனே ராசாவையே வேலெயெச் சாய்க்கணும். அப்பொத்தானே அவுக பட்டங்கட்டிக்க முடியும்?—இருக்கட்டும். இப்படி ஆரு செஞ்சாக, ஆரு தூண்டுதலினலே செஞ்சாக இண்டு கொஞ்ச நாளைக்குள்ளெ தெரியும் பாரு.

வேலு:—எப்படித் தெரியப்போறது? உனக்கு சோசியம் கீசியம் தெரியுமோ?

முரு:—எப்படியா? முத்தமிட்ட பய, தன்பெயரு "பாதககாதகன்" இண்டானும். ராசாவுக்குத் தன்னெத் தெரியுமிண்டும் சொன்னும். ஆன அந்தப்பேரெ ராசா கேட்டதில்லியாம். ஆளு இன்னுனிண்டே ராசாவுக்குத் தெரியல்லெ. இருந்தாலும் அந்தப் பொண்ணு சொன்ன அங்க அடையாளங்களைச் சொல்லி சமயம் பாத்து அவனெ லவுக்கிண்டு உயிரோடேயோ உயிரில்லாதேயோ புடிச்சாரவுகளுக்கு ரொம்ப ரொம்ப எனும் தருவதாக ராசா ஊரு முளுக்கத் தம்பட்டம் போடச்சொல்லி விட்டாரு. முளு சமுசாரமும் நாளைக்குத்தெரியும். அம்ப மந்திரி பேச்சைக் கேட்டு ராசா இப்படிச் செஞ்சிருக்காரு. அந்தப் பயலெ எப்படியாவது புடிச்சிட்டா, 'தான் ஆகாதவங்களிலெ ஒத்தன்' இண்டு அவனே சொல்லிக்கிட்டதுனலே, அவனலே இனிமே பயமிரா திண்டும், அவனுடைய கூட்டாளிக ஆருஇண்டும், ஆரு கொல்லச் சொல்லி தூண்டினவக இண்டும், மத்த சமுசாரங்களும், தெரிஞ்சுக்கலாமிண்டும், மாராசாவும் மந்திரியும் கூடி ரோசிச்சுச் செஞ்சிருக்கிற வேலே இது.

ஆறு:—சரி, இருக்கட்டும். அவ அளகெக் கண்டு மயங்கி அந்தப் பய முத்தம் குடுத்திருப்பானிண்டியே. அவன், அதன் பொறவு அவளைக் கொலேசெஞ்சிருக்கலாமே. ஏன் செய்யல்லே?

முரு:—செஞ்சே இருப்பான். ஆன மனிசன் நெனச்சபடியெல்லாம் எப்போதுமே நடந்துக்கிட்டிருக்குமா? அவன் கொல்லப்போற சமயத்துலே அதன் தோளி காஞ்சனம் வந்திருக்கும். இல்லாட்டி

ரொம்ப நாளியாயிட்டதனலே, ஆளுக உள்ளே கொளஞ்சிருக்கும். அவனுக்குத் தப்பிச்சாப் போருமின்டே யிருந்திருக்கும்.

பெரு:—நீ சொல்றபடிதானிருக்கும். ஆன எனக்கொரு சந்தேகம். கோச்சுக்காதேயுங்க. அளகெக் கண்டு சொக்கிய பய, வாயிலே துணியை படைச்சுப்பிட்டு முத்தமட்டுமா இட்டிருப்பன்?

முரு:—ஆருகண்டா? எல்லாம் சாமிக்குத்தான் வெளிச்சம். வேறு எதாவது நடந்திச்சிண்டாலும், 'இப்படியெல்லாம் நடந்திச்சு' இண்டு சொல்லிக்கிவாகளா? சொல்லிக்கிட்டா அவுமானமில்லே? அம்ப சாதிலே நடந்தர்க்கூடச் சொல்லிக்க மாட்டோமே. ராசாப் பொண்ணில்லே? அப்பறம் அவளைத் தொட்டுத் தாலி கட்டுவாகளா? முத்தமிட்டதே ராசாவுக்கும், மந்திரிக்கும், திடீரெண்டு அந்தப் பொண்ணு சொல்லிக்கிட்டிருக்கறபோது வந்த மாரி ஆயிக்குத்தான் தெரியுமாம்.

பெரு:—முருகா! இந்தா! ஒன் வாய் ஒட்டெவாய். நான் இண்டா இதெல்லாம் சொல்லமாட்டேன். நாச்சந்திலே—நாலுபேர் கூட்ற இடத்திலே, ராசாவுடைய ஆளுக வேசமாறி வந்திருக்கக்கூடிய சமயத்திலே, நீ இப்படிப்பேசின நம்ம தலேக்கே கல்லுப்பிடிப் பாக. அந்தப் பொண்ணுடைய சமுசாரத்தைக் கேக்கக் கேக்க மனசுக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. வெளயாட்டுக்குச் சொல்லல்லே. அதன் முகத்தைப் பாத்தாலும் போகும் பசி கண்டாலும் போகும் களை. இப்போ ஒரு காரியம் செய்வோம். நாலு பக்கமும் பிரிஞ்சு போவோம். ஆராரு இந்தச் சமுசாரத்தைப்பத்தி எப்படி எப்படிப் பேசிக்கிறுக இண்டு கேப்போம். கூடுமான அந்தக் கௌக் குமரன்,—ஒத்தைக்கண் பொட்டைப் பயல் வேசமாறி வந்திருந்தாக்கூடக் கண்டுபிடிக்கப் பாப்போம். அதிட்டமிருந்தா, அம்புளுக்கேன் ராசா சொல்ற எனுக கிடைக்கப்படாது?

[எல்லோரும் பிரிந்து மூலைக்கொருவராகச் செல்கின்றனர்,]

(காட்சி முடிகிறது.)

திருக்குடந்தை: ஆயக்கண்ணனார்.